**செய்தி வெளியீடு எண்: 29/2025** **நாள்: 27.03.2025**

## பத்திரிக்கைச் செய்தி

## “KYN Live – Chennai’s Biggest Fusion Concert" - ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு தடையில்லா மெட்ரோ பயணம்

நந்தனம் YMCA கல்லூரி மைதானத்தில் “KYN Live – Chennai’s Biggest Fusion Concert" இன்னிசை கச்சேரி மார்ச் 29, 2025 (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் ரசிகர்களுக்கு தடையில்லா போக்குவரத்தை வழங்குவதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் Kynhood Technologies Private நிறுவனத்துடன் இணைந்து கட்டணமில்லா பயணத்தை வழங்குவதற்காக உடன்பாடு செய்துள்ளது.

இசை நிகழ்ச்சிக்கான பயணச்சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இந்த ஸ்பான்சர் செய்யப்பட்ட பிரத்யேக டிஜிட்டல் மெட்ரோ பாஸ்கள் வழங்கப்படும். இந்த டிஜிட்டல் பயணச்சீட்டுகளை பயன்படுத்தி பயணிகள் எந்த ஒரு மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்தும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு மிக அருகில் உள்ள நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு சென்று திரும்ப முடியும்.

இசை நிகழ்ச்சிக்கு வருபவர்கள் தங்கள் டிஜிட்டல் பயணச்சீட்டுகளில் உள்ள தனித்துவமான QR குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகையை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம்.

நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் 23:17 மணிக்கும், விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் 23:37 மணிக்கும் புறப்படும். பயணிகள் கடைசி மெட்ரோ இரயில் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அனைத்து நிகழ்வு பார்வையாளர்களும் 23:00 மணிக்கு முன்னதாக நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பச்சை வழித்தடத்தில் உள்ள மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக, புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம் நோக்கி செல்லும் கடைசி மெட்ரோ இரயில் 23:16 மணிக்கு பதிலாக 23:52 மணிக்கு புறப்படும்.

**நிகழ்வின் விவரங்கள்:**

- நிகழ்வின் பெயர்: KYN Live – Chennai's Biggest Fusion Concert
- நிகழ்வு நடைபெறும் இடம்: YMCA மைதானம், நந்தனம்.
- அருகிலுள்ள மெட்ரோ இரயில் நிலையத்தின் பெயர்: நந்தனம் மெட்ரோ இரயில் நிலையம்
- மெட்ரோ இரயில் பயணத்திற்கு ஸ்பான்சர் செய்த நிறுவனம்: Kynhood Technologies Private Limited
- நிகழ்வு நடைபெறும் தேதி மற்றும் நேரம்: 29.03.2025, இரவு 7 மணி முதல் 10 மணி வரை.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**